# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

## <u>அ.வ.எண்.46/2015</u>

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. K. அம்பிகா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி 1 வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2021 ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி** - **25.02.2021**

**பெயர்** - **கோபி**

**த/பெ** - **எல்லையா**

**வயது** -

**சாட்சி** - **PW1**

**விசாரணை தொடங்கும் நேரம் -11.35am**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி-</u>**

நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்குரையிலோ மாதிரி வரைபடம் தாக்கல் செய்திருப்பதாக கூறவில்லை என்றால் சரிதான். அ அட்டவனை சொத்திற்கு 4 எல்லைகள் கிழக்கு பக்கம் எங்கள் நிலம், வடக்கே ரோடு, மேற்கே மண்ணார் ரெட்டியார் இடம், தெற்கே எங்கள் இடம் உள்ளது. பி அட்டவனை சொத்தின் 4 எல்லைகள் நான் தற்போது கூறியது பி அட்டவனை சொத்திற்கானது மாற்றி கூறிவிட்டேன். அ அட்டவனை சொத்தின் 4 எல்லைகள் வடக்கே ரோடு, கிழக்கே எங்கள் இடம், மேற்கே மண்ணார் இடம், தெற்கே எங்கள் இடம். பி அட்டவனை சொத்திற்கான 4 எல்லைகள் வடக்கே வழிப்பாதை, கிழக்கே முனுசாமி மற்றும் கோவன் நிலம், தெற்கே கோவிந்தசாமி இடம், மேற்கே கிருஷ்ணன் இடம் உள்ளது. முனுசாமி மற்றும் கோவன் தான் வழக்கின் எதிர் தரப்பினர். நான் வழக்குரையுடன் தாக்கல் செய்த மாதிரி வரைபடத்தில் அருகில் யாருடைய இடம் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வழக்கை பற்றி எந்த விவரம் தெரியாத காரணத்தினால் தான் அ அட்டவனை மற்றும் பி

அட்டவனை சொத்தை மாற்றி கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்குரையில் பத்தி 4ல் பாகப்பிரிவினை ஏற்பட்டதாகவும் பட்டா மறியதாகவும் கூறியுள்ளேன். பட்டா மற்றியதற்கு பின்னர் தான் பாகப்பிரிவினை ஏற்படுத்தினோம். என் படி பட்டா எப்போது மற்றியது என்று தெரியாது. அ அட்டவனைக்கு என்ன சர்வே எண் என்றால் 128/15பி மற்றும் பி அட்டவனைக்கு சர்வே எண் 128/15எ. மேற்படி விவரத்தை மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வாசா ஆ 1 ல் சர்வே எண் 128/15 என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சர்வே எண் எப்போது உட்பிரிவு செய்யப்பட்து என்றால் 1974க்கு பிறகு. எந்த ஆவணத்தின் அடிப்படையில் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் வாசா ஆ 1ன் அடிப்படையில். 1974லேயே வழக்கு சொத்துக்கள் அ மற்றும் பி அட்டவனையாக உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதற்கு ஆதாரமாக ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சாட்சி தற்போது பட்டா தாக்கல் செய்ததாக கூறுகிறார். எந்த ஆண்டு பட்டா கொடுக்கபட்டது என்றால் அது பற்றி தெரியாது. யுடிஆர் திட்டத்தின் கீழ் தவறுதலாக பட்டா கோவிந்த சாமி பெயரில் வழங்கப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. என்படி 2 1/2 சென்ட் நிலம் கிரையம் வாங்கிய விவரம் வாசா ஆ 1ல் இல்லை என்றால் சரிதான். இதற்கு மாறாக வழக்குரையிலோ பிரமான வாக்குமூலத்திலோ கிரையம் பெற்றதாக குறிப்பிட்டு இருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் இதற்கு முன் சாட்சியம் அளித்தபோது வழக்கின் விவரம் கோவிந்தசாமிக்கு தெரியும் என்று கூறியிருந்தேன். அவரை சொத்து குறித்து விசாரித்தேனா என்றால் விசாரித்தேன் நீதிமன்றத்தில் வந்து சாட்சியம் அளிப்பாரா என்றால் சாட்சியம் அளிப்பார் இன்றும் நீதிமன்றம் வந்துள்ளார். எதிர் தரப்பினர் காவல் நிலையத்தை அனுகியதாகவும் எங்களை அழைத்து விசாரித்தாகவும் என் வழக்கறிஞரிடம் கூறினேன். மேற்படி விவரத்தை வழக்குரையில் உள்ளதா என்று பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி விவரம் என் பிரமான வாக்குமூலத்திலும் இல்லை. பிரதிவாதி காவல் நிலையம் சென்றதால் நான் தடைஉத்தரவு பெற நீதிமன்றத்தை அனுகினேன். நான் கடந்தமுறை சாட்சியம் அளிக்கும் போது பிரதிவாதி என்னிடம் இடையூறு செய்தார்களா என்று கேட்டபோது இல்லை என்று தான் கூறியிருந்தேன். (அது தவறுதலாக சரிதான் என்று பதிவு செய்யப்பட்டது) வழக்கு சொத்திற்கு கிழக்கு மற்றும் மேற்கே எனக்கு இடம் உள்ளது என்றால் இல்லை. என் பெரியப்பாவிற்கு மட்டும் தான் உள்ளது. கிழக்கே எனக்கு இடம்

உள்ளது என்றாலும் அதை தான் தற்போது வரை வழிப்பாதையாக பயன்படுத்திவருகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி விவரத்தை மறைப்பதற்காகவே வழக்குரையின் மாதிரி வரைபடத்தில் 4 எல்லைகள் குறிப்பிடாமல் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. பி அட்டவனை சொத்திற்கு நானும் பிரதிவாதிகளும் உரிமை கொண்டாடுகிறோம் என்றால் சரிதான். 2 1/2 நிலம் என் தம்பியுடையது தான் என்பதற்கு எதிர் தரப்பினர் தாக்கல் செய்த பதில் உரையின் அடிப்படையிலோ அல்லது எதிர் தரப்பினர் தாக்கல் செய்த வழக்குரையின் அடிப்படையிலோ விளம்புகை பரிகாரம் கோரி திருத்தம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். வாசா ஆ 9 பி அட்டவனை சொத்தையும் உள்ளடக்கிய பல சொத்துக்கானது என்றாலும் தனியாக பி அட்டவனை சொத்திற்கானது இல்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் 2003ல் பெறப்பட்டது என்றால் சரிதான். 1973ல் இருந்து 2003 வரை வழக்கு சொத்தை அனுபவித்ததற்கு ஆதாரமாக என்னிடம் ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. வாசா ஆ 4 லும் பி அட்டவனை சொத்தை நான் வாய்மொழியாகவோ எழுத்து மூலமாகவோ கிரையம் பெற்றதாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். வாசா ஆ 4 ஏற்படுத்தப்பட்ட காலத்தில் பி அட்டவனைக்கான பட்டா என் பெயரில் இல்லை என்றால் சரிதான். வழக்கு பி அட்டவனை சொத்தை அபகறிக்கும் நோக்கத்தில் வாசா ஆ 4 ஏற்படுத்தப்பட்டபோது வழக்கின் பி அட்டவனை சொத்தை நாங்கள் வேண்டும் என்றே சேர்த்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. வாசா ஆ 6 மற்றும் வாசா ஆ 8 ஆவணம் எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் வீட்டு மற்றும் வழிக்காக தாக்கல் செய்தேன். வாசா ஆ 6 மற்றும் வாசா ஆ 8 அ அட்டவனை சொத்திற்கானது. வழக்கில் நான் பரிகாரம் கோருவது பி அட்டவனை சொத்துக்கு. வாசா ஆ 6 மற்றும் 8 பி அட்டவனைக்கானது அல்ல என்றால் சரிதான். 2015ல் காவல் நிலையம் சென்றபோது முதல் பிரதிவாதி பெயரில் இருந்த செட்டில் மென்ட் பற்றி தெரிந்துக்கொண்டேன். அந்த ஆவணத்தை நான் படித்து பார்த்தில்லை. வழக்கு சொத்திற்கு எங்களுக்கும் எந்த வித சம்மந்தம் இல்லை என்றாலும் பி அட்டவனை சொத்தை அபகறிக்க வேண்டி இந்த வழக்கை நான் பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாசா ஆ 1ல் கிழக்கு பக்கம் சென்று வர வழிகாக அனுமதிதான் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வாசா ஆ 1ல் சொத்திற்கு வடக்கு பக்கத்தில் உள்ள சொத்திற்கு உரிமையாளர் பாகத்தில் கிழக்கே வழியாக பயன்படுத்திகொள்ள வேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நான் 2000ல் வாசா ஆ 4ன் படி அனுமதிகொடுத்த சொத்தை எங்களுடையதாக காட்டி பிரித்துகொண்டபோதே அனுமதி சட்டபடி ரத்தாகவிட்டது என்றால் சரியல்ல. வழக்கின் பி அட்டவனை சொத்திற்கு எனக்கு எந்த வித உரிமை இல்லை என்றாலும் வெங்கடேசனுக்கு உரிமையாகி அவரது காலத்திற்கு பிறகு அவரது வாரீசு உரிமையானது என்றாலும் சரியல்ல. அதன் படி நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 46/2015 தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் வெங்கடேசன் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 149/2015 ல் கோரிய பரிகாரம் கிடைக்கதக்கது என்றாலும் சரியல்ல. வழக்கு பி அட்டவனை சொத்தில் நாங்கள் தகராறு செய்து மண் கொட்டினோன் என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் பி அட்டவனை சொத்திற்கான புகைப்படம். அந்த புகைப்படம் 7.7.2015 அன்று எடுக்கபட்டது. மேற்படி ஆவணம் பிசா ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காலி யாக இருந்த இடத்தில் மண் கொட்டி தகராறு செய்ததால் தான் பிரதிவாதிகள் எங்கள் மீது அசல் வழக்கு எண் 149/2015 தாக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்ற ஆணையர் வந்து சொத்தை அளவிடுவதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

**விசாரணை முடியும் நேரம் -12.29pm**